Judicial Form No.53
(Sec.Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure/
XXV Bharatiya Nagarik Suraksha Sanhita)
In the Court of the Judicial Magistrate No.I, Poonamallee
CC.No.330/2024

Calendar )(
Miscellaneous )( Case No. of 202
Preliminary Register )(
Sessions
Deposition of witness for PW.2 (LW) Prosecution
Defence
Court

Name :ராஜீவ்குமார்
Name S/O :சுகுமாறன்
Village :
Taluk :
Calling :
Religion : இந்தியன்
Age :
எதிரி ஆஜர் :எதிரிகள்6,8,10,11 ஆஜரில் உள்ளார்கள்.
solemnly aaffirmed in accordance with the provisions of the Oaths Act 1969
(Central Act 44 of 1969 on the day of 17.04.2026

<u>எதிரிகள் 8,9,11, தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் பிகாம் பயின்றுள்ளேன். நான் ஐடி துறையில் படிப்பு ஏதேனும் படித்துள்ளேனா என்றால் டிப்ளமோ இன் கம்ப்யூட்டர் அப்ளிகேஷன் படித்துள்ளேன். நான் 1997 ல் மேற்படி டிப்ளமோ படித்தேன். நான் வேலை செய்து கொண்டே படித்தேன். நான் முதன் முதலில் சரவணா கம்ப்யூட்டர்ஸ் என்ற நிறுவனத்தில் 1997 முதல் 1999 வரை வேலை பார்த்தேன். நான் அங்கு டேட்டா எண்ட்ரியாக சேர்ந்தேன். நான் அதிலிருந்து வெளியே வரும்போது சிப்ட் சூப்பர்வைசராக வெளியே வந்தேன். அதன்பின்னர் எல்க்யூப் இன்னோவேட்டிவ் சொலியூசன் நிறுவனத்தில் 1999 ல் சேர்ந்தேன். நான் அங்கு டேட்டா எண்ட்ரியாகதான் பணியில் சேர்ந்தேன் என்றால் சரிதான். எல்க்யூப் நிறுவனம் மெடிக்கல் பில்லிங் செய்து வந்தார்கள். நான் அங்கு எத்தனை ஆண்டுகள் வரை பணியாற்றினேன் என்றால் 2008 வரை பணியாற்றினேன்.

2. எல்க்யூப் நிறுவனத்திலிருந்து வெளியே வந்தபிறகு Medpro health care services private limited நிறுவனத்தில் ஆரம்பித்தோம். ஜெயபாலாஜி மற்றும் சிவக்குமார் ஆகியோர் என்னுடன் மேற்படி நிறுவனத்தில் டிரைக்டர்ஸாக இருக்கிறார்கள். நானும் சிவக்குமார் என்பவரும் சரவணா கம்ப்யூட்டர்ஸ் நிறுவனத்தில் பணியாற்றியதிலிருந்தே பழக்கம் உள்ளவர். ஜெயபாலாஜி எல்க்யூப் நிறுவனத்தில் பணியாற்றியதிலிருந்து பழக்கமானவர். நான் எல்க்யூப் நிறுவனத்திற்கு முதலில் சென்று சேர்ந்தேன். அதன்பிறகு சிவக்குமார் அதில் சேர்ந்தார். நாங்கள் 3 பேர் சேர்ந்து எங்கள் நிறுவனத்தை துறை சார்ந்து பிரித்துக்கொண்டு நடத்தி வருகிறோமா அல்லது 3 பேரும் சேர்ந்து அனைத்து துறைகளையும் பார்த்து நடத்தி வருகிறோமா என்றால்
ஜெயபாலாஜி கிளைண்ட் தொடர்பான துறையிலும் நான் எச்ஆர் ஐடி தொடர்பான விஷயங்களை பார்த்து வருகிறோம். சிவக்குமார் புரடக்ஷன் தொடர்பான துறையை கவனித்து வருகிறார்.

3. ஒரு தனியார் நிறுவனத்தை நடத்தி வரவேண்டும் என்றால் மெமோரெண்டம் ஆப் அசோஷியேசன் மற்றும் ஆர்டிக்கல்ஸ் ஆப் அசோசியேசன் இருக்க வேண்டும் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதைக்குறித்து எனக்கு நினைவில் இல்லை. ஒரு கம்பெனி என்பது ஒரு தனிப்பட்ட ஒன்று அந்த கம்பெனியில் மெமோரெண்டம் ஆப் அசோஷியேசன் மற்றும் ஆர்டிக்கல்ஸ் ஆப் அசோசியேசனின் படி அதை இயக்கும் டேரைக்டர்கள் நடந்து கொள்ள வேண்டும் என்றால் சரிதான். கம்பெனியின் சார்பாக எந்த ஒரு செயலை செய்ய வேண்டும் என்றாலும் அந்த கம்பெனியில் போர்டு ரிசொலியூசன் போடப்பட்டு அதற்கான நபரை நியமனம் செய்துதான் எந்த செயலையும் செய்ய முடியும் என்றால் சரிதான்.

4. நாங்கள் இந்தவழக்கில் 3 பேராக சேர்ந்து புகாரை அளித்திருந்தோம். அதனை நாங்கள் கம்பெனியின் சார்பாக அளித்துள்ளோமா அல்லது எங்களது தனிப்பட்ட காரணத்தினால் அளித்துள்ளோமா என்றால் நாங்கள் 3 பேரும் சேர்ந்து கம்பெனியின் சார்பாக கொடுத்துள்ளோம். நாங்கள் 3 பேரும் சேர்ந்துதான் கம்பெனி. இந்த புகாரைக்கொடுப்பதற்கு முன்னர் போர்டு ரிசொலியூசன் போட்டு யாரையாவது நியமனம் செய்து புகார் கொடுக்கப்பட்டதா என்றால் அதைக்குறித்து எனக்கு நினைவில் இல்லை. இந்நீதிமன்றத்தில் போர்டு ரிசொலியுசன் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அதைக்குறித்து தெரியாது. நான் எனது கம்பெனி சார்பாக கொடுக்கப்பட்ட புகார் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனத்தில் நாங்கள் 3 பேரும் டேரைக்டராக இருக்கிறோம் என்றால் சரிதான். மேனேஜிங் டேரைக்டர் என்று தனிப்பட்டு யாரும் இயங்கவில்லை என்றால் சரிதான். எங்கள் கம்பெனியில் காசோலைகளை யார்

கையொப்பம் செய்கிறார்கள் என்றால் நாங்கள் 3 பேரில் ஏதேனும் 2 நபர்கள் கையொப்பம் செய்கிறோம்.

4. அதற்கு வங்கியில் என்ன ஆவணம் கொடுத்துள்ளோம் என்றால் வங்கி கணக்கு துவங்கும்போது அதில் கொடுக்கப்பட்ட விண்ணப்பத்தில் எங்களுக்குள் ஏதேனும் 2 பேர் கையொப்பம் போடுவோம் என்று குறிப்பிட்டு கொடுத்துள்ளோம். எல்க்யூப் நிறுவனத்திலிருந்து நாங்கள் விலகிய பின்னர் நாங்கள் ஆரம்பித்த நிறுவனத்தின் முதல் கிளையண்ட் யார் என்றால் வேறு ஒரு கம்பெனியிடம் சப்கான்ட்ராக்ட் எடுத்து செய்து வந்தோம். அந்த நிறுவனத்தின் பெயர் என்ன என்றால் Medpro Ideal solutions ஆகும். அந்த நிறுவனம் எங்கள் நிறுவனத்தின் ஒரு அங்கமா என்றால் இல்லை. எங்கள் நிறுவனத்தில் உள்ள டேரக்டர்கள் யாரும் Medpro Ideal solutions நிறுவனத்தில் இல்லை என்றால் சரிதான். Medpro Ideal solutions நிறுவனத்தின் மருத்துவர்களுக்கு பில்லிங் நாங்கள் செய்கிறோம் என்றால் சரிதான்.

6. Glenwood systems LLC என்கிற அமெரிக்கா நிறுவனம் எங்கள் நிறுவனத்தின் மீது அமெரிக்காவில் வழக்கு தொடர்ந்து என்றால் சரிதான். எதிரிகள் நிறுவனத்தின் மீது நாங்கள் சாட்டும் குற்றச்சாட்டுகள் அனைத்தும் மேற்படி Glenwood systems LLC நிறுவனம் எங்கள் மீது வழக்கு தொடர்ந்தது என்றால் சரியல்ல. மேற்படி Glenwood systems LLC நிறுவனம் தாக்கல் செய்த வழக்கினில் தற்போதைய நிலை என்ன என்றால் அந்த வழக்கு முடிந்துவிட்டது. அந்த வழக்கில் எப்படி முடிக்கப்பட்டது என்றால் நீதிமன்றம் அந்த வழக்கை தள்ளுபடி செய்தது. அந்த வழக்கில் எல்லை வரம்பு காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். நாங்கள் 3 பேர் சேர்ந்து அளித்த புகாரில் மைக்கேல் என்பவர் இவ்வழக்கின் 2ம் எதிரி உமர் ஒரு கம்பெனி துவங்கியுள்ளார் என்றும் அவர்களை வேலைக்கு எதிரி அழைக்கிறார் என்றும் ஒரு ரெக்கார்டிங்கை காட்டியபின்னர்தான் எங்களுக்கு தெரியவந்ததாக சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். ஆனால் எதிரிகள் எங்கள் தரவுகளை திருடியதாகவும்தான் வழக்குகொடுத்தோம்.

7. மைக்கேல் காட்டிய ரெக்கார்டிங் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அதை சமர்ப்பித்ததாக எனக்கு நினைவில் உள்ளது. மைக்கேல் என்பவரை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மைக்கேல் தற்போது எனது கம்பெனியில் வேலை செய்கிறாரா என்றால் இல்லை. எனக்கு சாதகமாக எங்கள் நிறுவனத்தில் பணியாற்றும் நபர்களை மட்டுமே இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளோம் என்றாலும் தற்போது மைக்கேல் எங்கள் நிறுவனத்தில் பணியாற்றவில்லை என்பதாலும் அவர் எங்கள் கட்டுப்பாட்டில் இல்லை என்பதாலும் அவரை

இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. மைக்கேல் எங்கள்நிறுவனத்தில் வேலை செய்யும் மணிகண்டனிடம் காட்டி அதன்பின்னர்தான் எனக்கு காட்டப்பட்டது. நான்தான் ஐடி தொடர்பான சங்கதிகளை எங்கள் நிறுவனத்தில் பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். நான் டிஜிட்டல் பாரன்சிக்ஸ் தொடர்பாக படித்துள்ளேனா என்றால் இல்லை. எங்கள் நிறுவனத்தில் கான்பிடன்சியல் டேட்டாக்கள் இருப்பதனை பாதுகாப்பு செய்வதற்கு என்ன நடைமுறைகள் மற்றும் தடுப்பு வகையறைகள் எங்களது ஐடி துறையில் செய்துள்ளோம் என்றால் ஜிமெயில், இமெயில், பென்டிரைவ் ஆக்சஸ் கொடுப்பதில்லை. கிளையண்ட் கேர் மற்றும் கிளையண்ட்களை பார்க்கும் அலுவலர்களுக்கு மட்டும் அதனை அனுமதிக்கிறோம்.

8. எங்கள் நிறுவனத்தில் ஃபையர்வால் உள்ளது என்றால் உள்ளது. என்ன ஃபையர்வால் எங்கள் நிறுவனத்தில் போட்டுள்ளோம் என்றால் falcon crowd streak போட்டுள்ளோம். அதன் நன்மை பயன்கள் என்ன என்றால் வைரஸ் வராமல் தடுக்கும், கம்ப்யூட்டரில் speed control செய்ய முடியும், சர்வரில் கனெக்ட் செய்யப்பட்ட அனைத்து கம்ப்யூட்டர்களையும் கண்ட்ரோல் செய்ய முடியும். ஒரு நபர் அவருக்கு அனுமதிக்கப்பட்ட வரம்பை மீறி செயல்பட்டால் அதனை கன்ட்ரோல் முடியுமா என்றால் தேவையில்லாத வெப்சைட்டுகளுக்கு போனார்கள் என்றால் அதனை கன்ட்ரோல் செய்ய முடியும். ஒருவர் அலுவலகத்தில் வழங்கப்பட்ட மின்னஞ்சலில் இருந்து தனிப்பட்ட நபரின் மின்னஞ்சலுக்கு டேட்டாக்களை அனுப்பும்பொழுது அதனைக்கன்ட்ரோல் செய்ய முடியுமா என்றால் முடியாது.

9. ஃபையர்வாலின் முக்கியமான செயல்பாடு ஒரு நிறுவனத்தின் டேட்டாக்களை பாதுகாப்பது என்றால் சரிதான். எந்த தேதியில் எந்த நேரத்தில் எங்கள் நிறுவனத்தின் மின்னஞ்சலிலிருந்து அனுப்பப்பட்டது என்பதற்கான பதிவுகள் எங்களது சர்வரில் உள்ளதா என்றால் ஜிமெயில் சர்வரில் உள்ளது. யாருடைய ஜிமெயில் சர்வரில் உள்ளது என்றால் Medpro health care services private limited ஜிமெயில் சர்வரில் உள்ளது. முதலில் புகார் அளித்தபோது உமர் மற்றும் செந்தில் என்பவர்கள் மீது புகார் அளித்தோம் என்றால் 8ம்எதிரி முதல் 10ம் எதிரி வரை உள்ளவர்களுக்கு எங்கள் நிறுவனத்தில் என்ன ஆக்சிஸ் வழங்கப்பட்டது என்றால் ஜிமெயில் ஆக்சிஸ் கொடுக்கப்படவில்லை. இன்டர்னெல் இமெயில் ஆக்சிஸ் கொடுக்கப்பட்டிருந்தது.

10. பிரபு, கார்த்திக், கிருஷ்ணதாஸ் ஆகியோர்களுக்கு என்ன பொறுப்புகளில் இருந்தார்கள் என்றால் அவர்களது பொறுப்புகள் எனக்கு நினைவில் இல்லை. அவர்கள் ஜெயபாலாஜி என்பவரிடம்தான் ரிப்போர்ட்

செய்வார்கள். நான் போலீசார் பதிவு செய்த வாக்குமூலத்தில் 152 பக்கங்கள் கொண்ட கான்பிடன்சியல் டேட்டாக்கள் திருடப்பட்டதாக சொல்லிவிட்டு நீதிமன்றத்தில் 172 பக்கங்கள் கொண்ட ஆவணத்தை சமர்ப்பித்துள்ளேன், அதில் எது சரியானது என்றால் அது 145 பக்கங்கள் கொண்டது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் சேர்த்து 172 பக்கங்கள் வந்திருக்கும். Standard Operating procedure 145 பக்கங்கள் கொண்டது. விசாரணையில் குறிப்பிட்டுள்ள 152 பக்கங்கள் எதனைக்குறிக்கிறது என்றால் Standard Operating procedure மற்றும் இமெயில் ஆவணங்கள் சேர்த்து குறிப்பிட்டது. எதிரிகள் 8,9,11 ஆகியோர்கள் எங்கள் நிறுவனத்தை விட்டுவிட்டு எம்கேர் நிறுவனத்துக்கு சென்றதாக வாக்குமூலத்தில் ஜெயபாலாஜி சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

11. நாங்கள் புகாரில் ஏற்கனவே எங்கள் நிறுவனத்தில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்று நாங்கள் குறிப்பிட்டுள்ளோம். எதனால் அந்த நஷ்டம் ஏற்பட்டது என்றால் எங்கள் நிறுவனத்தின் டேட்டாக்களை திருடி சென்று அவர்கள் நிறுவனம் ஆரம்பித்ததால் எங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டது. நாங்கள் புகாரில் எங்கள் நிறுவனம் ஏற்கனவே நஷ்டத்தில் இருந்தது என்றும் அவர்கள் கம்பெனி துவங்கியதால் மேலும் நஷ்டம் ஏற்பட்டது என்றுதான் புகார் அளித்துள்ளோம் என்றால் சரியல்ல. இவர்களால்தான் எங்கள் கம்பெனிக்கு நஷ்டம் ஏற்பட்டது. எங்கள் புகாரில் சுமார் ஒரு கோடி ரூபாய் வருமானம் இழப்பு ஏற்பட்டது என்று சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். அது தொடர்பாக ஆடிட்டிங் ரிப்போர்ட் ஏதேனும் கொடுத்துள்ளோமா என்றால் இல்லை. தேவைப்பட்டால் கொடுக்கலாம்.

12. நாங்கள் குறிப்பிட்டுள்ள ரூபாய் ஒரு கோடி தொகை நஷ்டம் என்பது டேட்டாக்களை திருடியதால் ஏற்பட்டதா அல்லது வேறு கம்பெனியை துவங்கி எங்களது வாடிக்கையாளர்களை எடுத்துக்கொண்டதால் ஏற்பட்டதா என்றால் கம்பெனியை துவங்கி எங்களது வாடிக்கையாளர்களை எடுத்துக்கொண்டதால் ஏற்பட்ட நஷ்டம் ரூபாய் ஒரு கோடி, எங்கள் டேட்டாக்களை திருடியதால் ஏற்பட்ட நஷ்டத்தை அளவிட முடியாது. நாங்கள் 15 ஆண்டுகளாக சேகரித்த டேட்டாக்களை எடுத்துக்கொண்டுள்ளார்கள். அந்த டேட்டாக்களை படித்தாலே அந்த மெடிக்கல் பில்லிங் நிறுவனத்தை எளிதாக துவங்கி செயல்படுத்த முடியும். நாங்கள் சொல்லக்கூடிய அந்த டேட்டாக்கள் ஒவ்வொரு கிளையண்டுகளுக்கு தனிப்பட்ட முறையில் செயல்படுத்தக்கூடியதா அல்லது பொதுவாக அனைவரும் பயன்படுத்தக்கூடியதா என்றால் பொதுவாக எல்லாத்துக்கும் பயன்படுத்தக்கூடிய பொதுவான டேட்டாக்கள்.

13. அந்த டேட்டாக்களை நாங்களே உருவாக்கினோமா அல்லது எங்களது மருத்துவ கிளையண்டுகள் அதுபோன்றுதான் செயல்படுத்தவேண்டும் என்று கொடுத்து செயல்முறைகளா என்றால் எங்களது அறிவுபூர்வமான கற்றறிந்த சங்கதிகளை தான் கொண்டு அதனை சேகரித்து வைத்திருந்தோம். மருத்துவர்கள் அதைக்கொடுக்க வேண்டியதில்லை. எங்களது 15 ஆண்டுகால உழைப்பு என்று சொல்லப்படும் இந்த டேட்டாக்களுக்கு காபிரைட்டு மற்றும் பேட்டண்ட் பெற்றுள்ளோமா என்றால் இல்லை. எங்களது Standard Operating procedure பொறுத்து காபிரைட்டு பேட்டண்ட் தேவையில்லை. எங்கள் நிறுவனத்தில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களிடம் non disclosure agreement போட்டு வைத்திருந்தோம்.

Sdx/–Tmt.M.Amudha
Judicial Magistrate No.I
Poonamallee